ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருவிண்ணகரம்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருவிண்ணகரம்

## பொதுத்தனியன்கள்

ராமாநுஜ த$_3$யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்$_3$ய பூ$_4$ஷணம் |
ஸ்ரீமத்$_3$வேங்கடநாதா$_2$ர்யம் வந்தே$_3$ வேதா$_3$ந்ததே$_3$ஶிகம் || **1** ||

ஸ்ரீஶைலேஶ த$_3$யாபாத்ரம் தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$கு$_3$ணார்ணவம் |
யதீந்த்$_3$ரப்ரவணம் வந்தே$_3$ ரம்யஜாமாதரம் முநிம் || **2** ||

லக்ஷ்மீநாத$_2$ஸமாரம்பா$_4$ம் நாத$_2$யாமுநமத்$_4$யமாம் |
அஸ்மதா$_3$சார்யபர்யந்தாம் வந்தே$_3$ கு$_3$ருபரம்பராம் || **3** ||

யோ நித்யமச்யுதபதா$_3$ம்பு$_3$ஜயுக்$_3$மருக்ம -
வ்யாமோஹதஸ்ததி$_3$தராணி த்ரு’ணாய மேநே |
அஸ்மத்$_3$கு$_3$ரோர்ப$_4$க$_3$வதோஸ்ய த$_3$யைகஸிந்தோ$_4$:
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே || **4** ||

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூ$_4$தி:
ஸர்வம் யதே$_3$வ நியமேந மத$_3$ந்வயாநாம் |
ஆத்$_3$யஸ்ய ந: குலபதேர்வகுளாபி$_4$ராமம்
ஸ்ரீமத் தத$_3$ங்க்$_4$ரியுக$_3$ளம் ப்ரணமாமி மூர்த்$_4$நா || **5** ||

பூ$_4$தம் ஸரஶ்ச மஹதா$_3$ஹ்வய ப$_4$ட்டநாத$_2$
ஸ்ரீப$_4$க்திஸார குலஶேக$_2$ர யோகி$_3$வாஹாந் |
ப$_4$க்தாங்க்$_4$ரிரேணு பரகால யதீந்த்$_3$ர மிஶ்ராந்
ஸ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோऽஸ்மி நித்யம் || **6** ||

## பெரியாழ்வார் தனியன்கள்

கு$_3$ருமுக$_2$மநதீ$_4$த்ய ப்ராஹ வேதா$_3$நஶேஷாந்
நரபதிபரிக்லு'ப்தம் ஶுல்கமாதா$_3$துகாம:।
ஶ்வஶுரமமரவந்த்$_3$யம் ரங்க$_3$நாத$_2$ஸ்ய ஸாக்ஷாத்
த்$_3$விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ॥

மின்னார் தட மதிள் சூழ் வில்லிபுத்தூர் என்றொரு கால் ⋆
சொன்னார் கழற்கமலம் சூடினோம் ⋆
முன்னாள் கிழி அறுத்தான் என்றுரைத்தோம் ⋆
கீழ்மையினிற் சேரும் வழி அறுத்தோம் நெஞ்சமே ! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தான் என்று ⋆
ஈண்டிய சங்கம் எடுத்தூத ⋆
வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழி அறுத்தான் ⋆
பாதங்கள் யாமுடைய பற்று

## பெரியாழ்வார் திருமொழி – திருப்பல்லாண்டு

‡ பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு ⋆
பல கோடி நூறாயிரம் ⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! ⋆
உன் சேவடி செவ்வி திருக்காப்பு ॥ **1.1.1** ॥

‡ அடியோமோடும் நின்னோடும் ⋆
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு ⋆
வடிவாய் நின் வல மார்பினில் ⋆
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு ⋆
வடிவார் சோதி வலத்துறையும் ⋆
சுடராழியும் பல்லாண்டு ⋆

படை போர் புக்கு முழங்கும் ⋆
அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே ॥ **1.1.2** ॥

வாழாட் பட்டு நின்றீர் உள்ளீரேல் ⋆
வந்து மண்ணும் மணமும் கொண்மின் ⋆
கூழாட் பட்டு நின்றீர்களை ⋆
எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் ⋆
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள் ⋆
இராக்கதர் வாழ் ⋆
இலங்கை பாழாளாகப் படை பொருதானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.3** ॥

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து ⋆
எங்கள் குழாம் புகுந்து ⋆
கூடு மனம் உடையீர்கள் வரம்பொழி ⋆
வந்தொல்லைக் கூடுமினோ ⋆
நாடு நகரமும் நன்கறிய ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பாடு மனம் உடைப் பத்தர் உள்ளீர் ! ⋆
வந்து பல்லாண்டு கூறுமினே ॥ **1.1.4** ॥

அண்டக்குலத்துக்கதிபதி ஆகி ⋆
அசுரர் இராக்கதரை ⋆
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த ⋆
இருடீகேசன் தனக்கு ⋆
தொண்டக் குலத்தில் உள்ளீர் ! வந்தடி தொழுது ⋆
ஆயிர நாமம் சொல்லி ⋆

பண்டைக் குலத்தைத் தவிர்ந்து ⋆
பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே ॥ **1.1.5** ॥

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ⋆
ஏழ் படி கால் தொடங்கி ⋆
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம் ⋆
திருவோணத் திருவிழவில் அந்தியம் போதில் அரியுருவாகி ⋆
அரியை அழித்தவனை ⋆
பந்தனை தீரப் பல்லாண்டு ⋆
பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே ॥ **1.1.6** ॥

தீயிற் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி ⋆
திகழ் திருச்சக்கரத்தின் ⋆
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று ⋆
குடிகுடி ஆட்செய்கின்றோம் ⋆
மாயப் பொருபடை வாணனை ⋆
ஆயிரந் தோளும் பொழி குருதி பாய ⋆
சுழற்றிய ஆழி வல்லானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.7** ॥

நெய்யிடை நல்லதோர் சோறும் ⋆
நியதமும் அத்தாணிச் சேவகமும் ⋆
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு ⋆
காதுக்குக் குண்டலமும் ⋆
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து ⋆
என்னை வெள்ளுயிர் ஆக்க வல்ல ⋆
பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.8** ॥

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை உடுத்துக் ⋆
கலத்ததுண்டு ⋆
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன ⋆
சூடுமித்தொண்டர்களோம் ⋆
விடுத்த திசைக் கருமம் திருத்தித் ⋆
திருவோணத் திருவிழவில் ⋆
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.9** ‖

எந்நாள் எம்பெருமான் ⋆
உன்தனக்கடியோம் என்றெழுத்துப்பட்ட அந்நாளே ⋆
அடியோங்கள் அடிக்குடில் ⋆
வீடு பெற்றுய்ந்தது காண் ⋆
செந்நாள் தோற்றித் ⋆
திருமதுரையுள் சிலைகுனித்து ⋆
ஐந்தலைய பைந்நாகத் தலை பாய்ந்தவனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.10** ‖

‡ அல்வழக்கொன்றும் இல்லா ⋆
அணி கோட்டியர் கோன் ⋆
அபிமான துங்கன் செல்வனைப்போலத் ⋆
திருமாலே ! நானும் உனக்குப் பழவடியேன் ⋆
நல்வகையால் நமோ நாராயணாவென்று ⋆
நாமம் பல பரவி ⋆
பல்வகையாலும் பவித்திரனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுவனே ‖ **1.1.11** ‖

‡ பல்லாண்டென்று பவித்திரனைப் ⋆
பரமேட்டியை ⋆
சார்ங்கம் என்னும் வில்லாண்டான் தன்னை ⋆
வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல் ⋆
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பல்லாண்டும் பரமாத்மனைச் ⋆
சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே ‖ **1.1.12** ‖

## பெரிய திருமொழி – வண்டுணும்

‡ வண்டுணு நறு மலர் இண்டை கொண்டு ⋆
பண்டை நம் வினை கெட என்று ⋆
அடி மேல் தொண்டரும் அமரரும் பணிய நின்று ⋆
அங்கண்டமொடகல் இடம் அளந்தவனே ! ⋆
ஆண்டாய் உனைக் காண்பதோர் ⋆
அருள் எனக்கருளுதியேல் ⋆
வேண்டேன் மனை வாழ்க்கையை ⋆
விண்ணகர் மேயவனே ‖ **6.1.1** ‖

அண்ணல் செய்தலை கடல் கடைந்து ⋆
அதனுள் கண்ணுதல் நஞ்சுண்ணக் கண்டவனே ! ⋆
விண்ணவர் அமுதுண அமுதில் வரும் ⋆
பெண் அமுதுண்ட எம் பெருமானே ! ⋆
ஆண்டாய் ! உனைக் காண்பதோர் ⋆
அருள் எனக்கருளுதியேல் ⋆
வேண்டேன் மனை வாழ்க்கையை ⋆
விண்ணகர் மேயவனே ‖ **6.1.2** ‖

குழல் நிற வண்ண ! நின் கூறு கொண்ட ⋆
தழல் நிற வண்ணன் நண்ணார் நகரம் விழ ⋆
நனி மலை சிலை வளைவு செய்து ⋆
அங்கழல் நிற அம்பது ஆனவனே ! ⋆
ஆண்டாய் ! உனைக் காண்பதோர் ⋆
அருள் எனக்கருளுதியேல் ⋆
வேண்டேன் மனை வாழ்க்கையை ⋆
விண்ணகர் மேயவனே ॥ **6.1.3** ॥

நிலவொடு வெயில் நிலவிரு சுடரும் ⋆
உலகமும் உயிர்களும் உண்டொரு கால் ⋆
கலை தரு குழவியின் உருவினை ஆய் ⋆
அலை கடல் ஆலிலை வளர்ந்தவனே ! ⋆
ஆண்டாய் ! உனைக் காண்பதோர் ⋆
அருள் எனக்கருளுதியேல் ⋆
வேண்டேன் மனை வாழ்க்கையை ⋆
விண்ணகர் மேயவனே ॥ **6.1.4** ॥

பார் எழு கடல் எழு மலை எழும் ஆய்ச் ⋆
சீர் கெழும் இவ் உலகேழும் எல்லாம் ⋆
ஆர் கெழு வயிற்றினில் அடக்கி நின்று ⋆
அங்கோர் எழுத்தோர் உரு ஆனவனே ! ⋆
ஆண்டாய் ! உனைக் காண்பதோர் ⋆
அருள் எனக்கருளுதியேல் ⋆
வேண்டேன் மனை வாழ்க்கையை ⋆
விண்ணகர் மேயவனே ॥ **6.1.5** ॥

கார் கெழு கடல்களும் மலைகளும் ஆய் ⋆
ஏர் கெழும் உலகமும் ஆகி ⋆
முதலார்களும் அறிவரு நிலையினைய் ஆய்ச் ⋆
சீர் கெழு நான்மறை ஆனவனே ! ⋆
ஆண்டாய் ! உனைக் காண்பதோர் ⋆
அருள் எனக்கருளுதியேல் ⋆
வேண்டேன் மனை வாழ்க்கையை ⋆
விண்ணகர் மேயவனே ‖ **6.1.6** ‖

உருக்குறு நறு நெய் கொண்டார் அழலில் ⋆
இருக்குறும் அந்தணர் சந்தியின் வாய் ⋆
பெருக்கமொடமரர்கள் அமர நல்கும் ⋆
இருக்கினில் இன் இசை ஆனவனே ! ⋆
ஆண்டாய் ! உனைக் காண்பதோர் ⋆
அருள் எனக்கருளுதியேல் ⋆
வேண்டேன் மனை வாழ்க்கையை ⋆
விண்ணகர் மேயவனே ‖ **6.1.7** ‖

காதல் செய்திளையவர் கலவி தரும் ⋆
வேதனை வினை அது வெருவுதலாம் ⋆
ஆதலின் உனதடி அணுகுவன் நான் ⋆
போதலர் நெடு முடிப் புண்ணியனே ! ⋆
ஆண்டாய் ! உனைக் காண்பதோர் ⋆
அருள் எனக்கருளுதியேல் ⋆
வேண்டேன் மனை வாழ்க்கையை ⋆
விண்ணகர் மேயவனே ‖ **6.1.8** ‖

சாதலும் பிறத்தலும் என்றிவற்றைக் ⋆
காதல் செய்யாதுன கழல் அடைந்தேன் ⋆
ஓதல் செய் நான்மறை ஆகி ⋆
உம்பர் ஆதல் செய் மூவுரு ஆனவனே ! ⋆
ஆண்டாய் ! உனைக் காண்பதோர் ⋆
அருள் எனக்கருளுதியேல் ⋆
வேண்டேன் மனை வாழ்க்கையை ⋆
விண்ணகர் மேயவனே ‖ **6.1.9** ‖

‡ பூ மரு பொழில் அணி ⋆
விண்ணகர் மேல் ⋆
காமரு சீர்க் ⋆
கலிகன்றி சொன்ன ⋆
பா மரு தமிழ் இவை ⋆
பாட வல்லார் ⋆
வாமனன் அடி இணை ⋆
மருவுவரே ‖ **6.1.10** ‖

## பெரிய திருமொழி – பொறுத்தேன்

‡ பொறுத்தேன் புன் சொல் நெஞ்சில் ⋆
பொருள் இன்பம் என இரண்டும் இறுத்தேன் ⋆
ஐம் புலன்கட்கிடன் ஆயின ⋆
வாயில் ஒட்டி அறுத்தேன் ⋆
ஆர்வச் செற்றம் அவை தம்மை ⋆
மனத்தகற்றி வெறுத்தேன் ⋆
நின் அடைந்தேன் ⋆
திருவிண்ணகர் மேயவனே ‖ **6.2.1** ‖

மறந்தேன் உன்னை முன்னம் *
மறந்த மதியில் மனத்தால் *
இறந்தேன் எத்தனையும் *
அதனால் இடும்பைக் குழியில் *
பிறந்தே எய்த்தொழிந்தேன் *
பெருமான் ! திரு மார்பா ! *
சிறந்தேன் நின் அடிக்கே *
திருவிண்ணகர் மேயவனே ॥ **6.2.2** ॥

மானேய் நோக்கியர் தம் *
வயிற்றுக் குழியில் உழைக்கும் *
ஊனேய் ஆக்கை தன்னை *
உதவாமை உணர்ந்துணர்ந்து *
வானே ! மா நிலமே ! *
வந்து வந்தென் மனத்திருந்த தேனே *
நின் அடைந்தேன் *
திருவிண்ணகர் மேயவனே ॥ **6.2.3** ॥

பிறிந்தேன் பெற்ற மக்கள் *
பெண்டிர் என்றிவர் பின் உதவாதறிந்தேன் *
நீ பணித்த அருள் என்னும் *
ஒள் வாள் உருவி எறிந்தேன் *
ஐம் புலன்கள் இடர் தீர *
எறிந்து வந்து செறிந்தேன் *
நின் அடிக்கே *
திருவிண்ணகர் மேயவனே ॥ **6.2.4** ॥

பாண் தேன் வண்டறையும் குழலார்கள் ⋆
பல்லாண்டிசைப்ப ⋆
ஆண்டார் வையம் எல்லாம் ⋆
அரசாகி ⋆
முன் ஆண்டவரே மாண்டார் என்று வந்தார் ⋆
அந்தோ ! மனை வாழ்க்கை தன்னை வேண்டேன் ⋆
நின் அடைந்தேன் ⋆
திருவிண்ணகர் மேயவனே ‖ **6.2.5** ‖

கல்லா ஐம் புலன்கள் அவை ⋆
கண்ட ஆறு செய்யகில்லேன் ⋆
மல்லா ! மல் அமருள் மல்லர் மாள ⋆
மல் அடர்த்த மல்லா ! ⋆
மல்லல் அம் சீர் ⋆
மதிள் நீர் இலங்கை அழித்த வில்லா ⋆
நின் அடைந்தேன் ⋆
திருவிண்ணகர் மேயவனே ‖ **6.2.6** ‖

வேறா யான் இரந்தேன் ⋆
வெகுளாது மனக்கொள் எந்தாய் ! ⋆
ஆறா வெந்நரகத்து ⋆
அடியேனை இடக் கருதி ⋆
கூறா ஐவர் வந்து ⋆
குமைக்கக் குடி விட்டவரைத் ⋆
தேறாதுன் அடைந்தேன் ⋆
திருவிண்ணகர் மேயவனே ‖ **6.2.7** ‖

தீ வாய் வல்வினையார் ⋆
உடன் நின்று சிறந்தவர் போல் ⋆
மேவா வெந்நரகத்து ⋆
இட உற்று விரைந்து வந்தார் ⋆
மூவா வானவர் தம் முதல்வா ! ⋆
மதி கோள் விடுத்த தேவா ⋆
நின் அடைந்தேன் ⋆
திருவிண்ணகர் மேயவனே ‖ **6.2.8** ‖

போதார் தாமரையாள் ⋆
புலவிக் குல வானவர் தம் கோதா ⋆
கோதில் செங்கோல் ⋆
குடை மன்னர் இடை நடந்த தூதா ⋆
தூ மொழியாய் ! சுடர் போல் ⋆
என் மனத்திருந்த வேதா ⋆
நின் அடைந்தேன் ⋆
திருவிண்ணகர் மேயவனே ‖ **6.2.9** ‖

‡ தேனார் பூம் புறவில் ⋆
திருவிண்ணகர் மேயவனை ⋆
வான் ஆரும் மதில் சூழ் ⋆
வயல் மங்கையர் கோன் மருவார் ⋆
ஊனார் வேற்கலியன் ⋆
ஒலி செய் தமிழ் மாலை வல்லார் ⋆
கோன் ஆய் வானவர் தம் ⋆
கொடி மா நகர் கூடுவரே ‖ **6.2.10** ‖

## பெரிய திருமொழி – துறப்பேன்

‡ துறப்பேன் அல்லேன் ⋆
இன்பம் துறவாது ⋆
நின் உருவம் மறப்பேன் அல்லேன் ⋆
என்றும் மறவாது ⋆
யான் உலகில் பிறப்பேன் ஆக எண்ணேன் ⋆
பிறவாமை பெற்றது ⋆
நின் திறத்தேன் ஆதன்மையால் ⋆
திருவிண்ணகரானே ॥ **6.3.1** ॥

துறந்தேன் ஆர்வச் செற்றச் சுற்றம் ⋆
துறந்தமையால் ⋆
சிறந்தேன் நின் அடிக்கே ⋆
அடிமை திருமாலே ⋆
அறம் தானாய்த் திரிவாய் ⋆
உன்னை என் மனத்தகத்தே ⋆
திறம்பாமல் கொண்டேன் ⋆
திருவிண்ணகரானே ॥ **6.3.2** ॥

மானேய் நோக்கு நல்லார் ⋆
மதி போல் முகத்துலவும் ⋆
ஊனேய் கண் வாளிக்கு ⋆
உடைந்தோட்டந்துன் அடைந்தேன் ⋆
கோனே ! குறுங்குடியுள் குழகா ! ⋆
திருநறையூர்த் தேனே ⋆
வரு புனல் சூழ் ⋆
திருவிண்ணகரானே ॥ **6.3.3** ॥

சாந்தேந்து மென் முலையார் ⋆
தடந் தோள் புணர் இன்ப வெள்ளத்தாழ்ந்தேன் ⋆
அரு நகரத்தழுந்தும் ⋆
பயன் படைத்தேன் ⋆
போந்தேன் புண்ணியனே ! ⋆
உன்னை எய்தி என் தீ வினைகள் தீர்ந்தேன் ⋆
நின் அடைந்தேன் ⋆
திருவிண்ணகரானே ‖ **6.3.4** ‖

மற்றோர் தெய்வம் எண்ணேன் ⋆
உன்னை என் மனத்து வைத்துப் பெற்றேன் ⋆
பெற்றதுவும் ⋆
பிறவாமை எம் பெருமான் ⋆
வற்றா நீள் கடல் சூழ் ⋆
இலங்கை இராவணனைச் செற்றாய் ⋆
கொற்றவனே ! ⋆
திருவிண்ணகரானே ‖ **6.3.5** ‖

மை ஒண் கருங்கடலும் ⋆
நிலனும் அணி வரையும் ⋆
செய்ய சுடர் இரண்டும் ⋆
இவை ஆய நின்னை ⋆
நெஞ்சில் உய்யும் வகை உணர்ந்தேன் ⋆
உண்மையால் இனி ⋆
யாதும் மற்றோர் தெய்வம் பிறிதறியேன் ⋆
திருவிண்ணகரானே ‖ **6.3.6** ‖

வேறே கூறுவதுண்டு ⋆
அடியேன் விரித்துரைக்கும் ஆறே ⋆
நீ பணியாதடை ⋆
நின் திருமனத்து ⋆
கூறேன் நெஞ்சு தன்னால் ⋆
குணம் கொண்டு ⋆
மற்றோர் தெய்வம் தேறேன் உன்னை அல்லால் ⋆
திருவிண்ணகரானே ॥ **6.3.7** ॥

முளிந்தீந்த வேங்கடத்து ⋆
மூரிப் பெருங்களிற்றால் ⋆
விளிந்தீந்த மா மரம் போல் ⋆
வீழ்ந்தாரை நினையாதே ⋆
அளிந்தோர்ந்த சிந்தை ⋆
நின்பால் அடியேற்கு ⋆
வான் உலகம் தெளிந்தே என்றெய்துவது ⋆
திருவிண்ணகரானே ॥ **6.3.8** ॥

சொல்லாய் திரு மார்வா ! ⋆
உனக்காகித் தொண்டு பட்ட நல்லேனை ⋆
வினைகள் நலியாமை ⋆
நம்பு நம்பீ ⋆
மல்லா ! குடம் ஆடீ ! ⋆
மதுசூதனே ⋆
உலகில் செல்லா நல் இசையாய் ! ⋆
திருவிண்ணகரானே ॥ **6.3.9** ॥

‡ தார் ஆர் மலர்க் கமலத் ⋆
தடம் சூழ்ந்த தண் புறவில் ⋆
சீர் ஆர் நெடு மறுகில் ⋆
திருவிண்ணகரானைக் ⋆
கார் ஆர் புயல் தடக்கைக் ⋆
கலியன் ஒலி மாலை ⋆
ஆர் ஆர் இவை வல்லார் ⋆
அவர்க்கல்லல் நில்லாவே ‖ **6.3.10** ‖

## பெரிய திருமொழி – ஒருநல் சுற்றம்

பத்தர் ஆவியைப் ⋆
பால் மதியை ⋆
அணித் தொத்தை ⋆
மாலிருஞ்சோலைத் தொழுது போய் ⋆
முத்தினை மணியை ⋆
மணி மாணிக்க வித்தினை ⋆
சென்று விண்ணகர் காண்டுமே ‖ **10.1.8** ‖

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – திருநெடுந்தாண்டகம்

‡ அன்றாயர் குல மகளுக்கரையன் தன்னை ⋆
அலை கடலைக் கடைந்தடைத்த அம்மான் தன்னை ⋆
குன்றாத வலி அரக்கர் கோனை மாளக் ⋆
கொடும் சிலைவாய்ச் சரம் துரந்து குலம் களைந்து வென்றானை ⋆
குன்றெடுத்த தோளினானை ⋆
விரி திரை நீர் விண்ணகரம் மருவி நாளும் நின்றானை ⋆
தண் குடந்தைக் கிடந்த மாலை ⋆
நெடியானை அடி நாயேன் நினைந்திட்டேனே ‖ **29** ‖

## திருவாய்மொழி - நல்குரவும்

‡ நல்குரவும் செல்வும் ⋆
நரகும் சுவர்க்கமுமாய் ⋆
வெல் பகையும் நட்பும் ⋆
விடமும் அமுதமுமாய் ⋆
பல்வகையும் பரந்த ⋆
பெருமான் என்னை ஆள்வானை ⋆
செல்வம் மல்கு குடி ⋆
திருவிண்ணகர் கண்டேனே ‖ **6.3.1** ‖

கண்ட இன்பம் துன்பம் ⋆
கலக்கங்களும் தேற்றமுமாய் ⋆
தண்டமும் தண்மையும் ⋆
தழலும் நிழலுமாய் ⋆
கண்டு கோடற்கரிய ⋆
பெருமான் என்னை ஆள்வான் ஊர் ⋆
தென் திரைப் புனல் சூழ் ⋆
திருவிண்ணகர் நன்னகரே ‖ **6.3.2** ‖

நகரமும் நாடுகளும் ⋆
ஞானமும் மூடமுமாய் ⋆
நிகரில் சூழ் சுடராய் இருளாய் ⋆
நிலனாய் விசும்பாய் ⋆
சிகர மாடங்கள் சூழ் ⋆
திருவிண்ணகர் சேர்ந்த பிரான் ⋆
புகர் கொள் கீர்த்தி அல்லால் இல்லை ⋆
யாவர்க்கும் புண்ணியமே ‖ **6.3.3** ‖

புண்ணியம் பாவம் ⋆
புணர்ச்சி பிரிவென்றிவையாய் ⋆
எண்ணமாய் மறப்பாய் ⋆
உண்மையாய் இன்மையாய் அல்லனாய் ⋆
திண்ண மாடங்கள் சூழ் ⋆
திருவிண்ணகர் சேர்ந்த பிரான் ⋆
கண்ணன் இன் அருளே ⋆
கண்டு கொண்மின்கள் கை தவமே ‖ **6.3.4** ‖

கை தவம் செம்மை ⋆
கருமை வெளுமையுமாய் ⋆
மெய் பொய் இளமை முதுமை ⋆
புதுமை பழமையுமாய் ⋆
செய்த திண் மதிள் சூழ் ⋆
திருவிண்ணகர் சேர்ந்த பிரான் ⋆
பெய்த காவு கண்டீர் ⋆
பெரும் தேவுடை மூவுலகே ‖ **6.3.5** ‖

மூவுலகங்களுமாய் அல்லனாய் ⋆
உகப்பாய் முனிவாய் ⋆
பூவில் வாழ் மகளாய் ⋆
தவ்வையாய்ப் புகழாய் பழியாய் ⋆
தேவர் மேவித்தொழும் ⋆
திருவிண்ணகர் சேர்ந்த பிரான் ⋆
பாவியேன் மனத்தே ⋆
உறைகின்ற பரஞ்சுடரே ‖ **6.3.6** ‖

பரஞ்சுடர் உடம்பாய் ⋆
அழுக்கு பதித்த உடம்பாய் ⋆
கரந்தும் தோன்றியும் நின்றும் ⋆
கை தவங்கள் செய்யும் ⋆
விண்ணோர் சிரங்களால் வணங்கும் ⋆
திருவிண்ணகர் சேர்ந்த பிரான் ⋆
வரங்கொள் பாதம் அல்லால் இல்லை ⋆
யாவர்க்கும் வன் சரணே ‖ **6.3.7** ‖

வன் சரண் சுரர்க்காய் ⋆
அசுரர்க்கு வெம் கூற்றமுமாய் ⋆
தன் சரண் நிழற்கீழ் ⋆
உலகம் வைத்தும் வையாதும் ⋆
தென் சரண் திசைக்குத் ⋆
திருவிண்ணகர் சேர்ந்த பிரான் ⋆
என் சரண் என் கண்ணன் ⋆
என்னை ஆளுடை என் அப்பனே ‖ **6.3.8** ‖

‡ என் அப்பன் எனக்காய் இகுளாய் ⋆
என்னைப் பெற்றவளாய் ⋆
பொன் அப்பன் மணி அப்பன் ⋆
முத்தப்பன் என் அப்பனுமாய் ⋆
மின்னப் பொன் மதிள் சூழ் ⋆
திருவிண்ணகர் சேர்ந்த அப்பன் ⋆
தன் ஒப்பார் இல் அப்பன் ⋆
தந்தனன் தன தாள் நிழலே ‖ **6.3.9** ‖

நிழல் வெய்யில் சிறுமை பெருமை ⋆
குறுமை நெடுமையுமாய் ⋆
சுழல்வன நிற்பன ⋆
மற்றுமாய் அவை அல்லனுமாய் ⋆
மழலை வாய் வண்டு வாழ் ⋆
திருவிண்ணகர் மன்னு பிரான் ⋆
கழல்கள் அன்றி ⋆
மற்றோர் களைகண் இலம் காண்மின்களே ‖ **6.3.10** ‖

‡ காண்மின்கள் உலகீர் ! என்று ⋆
கண் முகப்பே நிமிர்ந்த ⋆
தாள் இணையன் தன்னைக் ⋆
குருகூர்ச் சடகோபன் சொன்ன ⋆
ஆணை ஆயிரத்துத் ⋆
திருவிண்ணகர்ப் பத்தும் வல்லார் ⋆
கோணை இன்றி விண்ணோர்க்கு ⋆
என்றும் ஆவர் குரவர்களே ‖ **6.3.11** ‖

## பேயாழ்வார் அருளிச்செய்த – மூன்றாம் திருவந்தாதி

‡ பண்டெல்லாம் வேங்கடம் ⋆
பாற்கடல் வைகுந்தம் ⋆
கொண்டங்குறைவார்க்குக் கோயில் போல் ⋆
வண்டு வளம் கிளரும் நீள் சோலை ⋆
வண் பூங்கடிகை ⋆
இளங்குமரன் தன் விண்ணகர் ‖ **61** ‖

விண்ணகரம் வெஃகா ⋆
விரி திரை நீர் வேங்கடம் ⋆

மண் நகரம் மா மாட வேளுக்கை *
மண்ணகத்த தென் குடந்தை *
தேன் ஆர் திருவரங்கம் தென்கோட்டி *
தன் குடங்கை நீர் ஏற்றான் தாழ்வு ‖ **62** ‖

### திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – சிறிய திருமடல்

கணமங்கை
காரார் மணி நிறக் கண்ணனூர் விண்ணகரம் *
சீரார் கண புரம் சேறை திருவழுந்தூர் *
காரார் குடந்தை கடிகை கடல் மல்லை *
ஏரார் பொழில் சூழ் இடவெந்தை நீர்மலை *
சீராரும் மாலிரும் சோலை திருமோகூர் ‖ **37** ‖

### திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – பெரிய திருமடல்

தாமரை மேல்
மின் இடையாள் நாயகனை விண்ணகருள் பொன் மலையை *
பொன்னி மணி கொழிக்கும் பூங்குடந்தைப் போர் விடையை *
தென்னன் குறுங்குடியுள் செம் பவளக் குன்றினை *
மன்னிய தண் சேறை வள்ளலை ‖ **62** ‖

திரு பூமிதேவி சமேத ஒப்பிலியப்பன் திருவடிகளே சரணம்